padippakam

# மேற்கு பேர்லினிலும் ஜேர்மன் சமஷ்டிக் குடியரசிலும் அரசியல் தஞ்சம் கோருவோருக்கான அறிவுரைகள்

## பொதுவான புத்திமதிகள்

இவ்வறிவுரைகள் உண்மையான அரசியல் தஞ்சம் கோருவோருக்காகவே கொடுக்கப்படுகின்றன. அரசியல் தஞ்சம் கோரும் உரிமையும் தஞ்சம் அடையும் முறைகளும் சுருக்கமாக புரியக்கூடிய முறையில் விபரிக்கப்பட்டுள்ளது. இந்த அறிவுறுத்தல்களின் தொடர்பாக எந்தவிதமான உத்தியோகபூர்வ உரிமையும் கோருதல் முடியாது. எல்லாவற்றிற்கும் மேலாக அரசியல் தஞ்சம் கோருபவர் தற்போதைய நடைமுறைகளையும் தெரிந்து கொண்டிருத்தல் வேண்டும். எப்படியாயினும் கீழே தரப்படும் விபரங்கள் தற்போதைய நிகழ்வுகட்கு தொடர்புடையவையாய் இருக்கின்றன. இவ்வறிவுரைகள் சட்டத்தரணி சேவையாளோ சேவை நிபுணர்களாலோ அல்லது வேறு ஸ்தாபனங்களினாலோ கொடுக்கப்படும் சட்ட அறிவுரைகளுக்கு பதிலானவையாக கொள்ளுதல் முடியாது. எனவே அரசியல் தஞ்சம் கோரும் ஒருவர் தனது விண்ணப்பத்தை செய்வதற்கு முன்னரும் நிறைந்த கஷ்டங்கள் வரும்போதும் சட்ட அறிவுரைகளை பெறல் அவசியம். அரசியல் தஞ்சம் கோருவதற்கான விண்ணப்பமானது சொந்த நாட்டின் அரசாங்கத்திற்கு எதிரான தெளிவான கருத்தை கொண்டிருத்தல் வேண்டும். அநேக அரசியல் தஞ்சம் கோருபவர்களின் வெற்றிகரமான சாத்தியக்கூறு மிகவும் குறைவாகவுள்ளது (முக்கியமாக ஆபிரிக்காவிலும் ஆசியாவிலும் இருந்து வந்தவர்கள்) முடிவாக அவர்களில் அநேகமானவர்கள் சில வருடங்களின் பின் தமது சொந்த நாட்டிற்கு திரும்பவேண்டிய நிலை ஏற்படுகிறது. அரசியல் தஞ்சமானது உண்மையான காரணங்களை கொண்டிருப்பவர்களால் மட்டுமே கோரப்படல் வேண்டும். அவர்கள் வெற்றி பெறுவதும் நிச்சயமாகும்.

படிப்பகம்

padippakam



## யார் அரசியல் தஞ்சம் கோருவதற்கு தகமையுடையவர்கள்?

எவராவது ஒருவர் தனது நாட்டில் அரசியல் ரீதியாக வழக்கு தொடரப்பட்டவராக அல்லது சொந்த நாட்டிற்கு தான் திரும்பினால் விபரீத விளைவுகள் ஏற்படுமென அச்சம் கொண்டவராக இருந்தால் மேற்கு ஜேர்மன் அரசியல் சாசனத்தின் விதி 16 பந்தி 11·2 இன் படி மேற்கு ஜேர்மனியில் அரசியல் தஞ்சம் கோருவதற்கு அடிப்படை உரிமையில் தகமையுடைய-வராவார். இனரீதியாக, மதரீதியாக, அல்லது நீதி நெறிமுறைகளுடன் வாழும் ஒரு பகுதியினருக்கு எதிரான அரசியல் குற்றவாளி எனக் கரு-தப்பட்டு அரசாங்கத்தினால் நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு எடுக்கப்பட்ட காரணங்களைக் கொண்டிருப்பவர்கள் மட்டுமே அரசியல் ரீதியான வழக்கு தாக்கலுக்கு உள்ளானவரென கருதப்படுவார். தஞ்சம் கேட்கும் ஒருவர் தனது உயிருக்கு, உடலுக்கு அல்லது சுதந்திரத்திற்கு பயங்கர ஆபத்து ஏற்படுமென பயப்படும்போது மட்டுமே அந்த அரசியல் தஞ்சம் கோருவதற்கான காரணமானது தொந்தரவு எனக் கொள்ள-ப்படும். (உ-ம் :- நீண்டகால சிறை வாசம், சித்திரவதை...போன்றன) குறித்த காரணங்களில் ஏதாவது ஒன்றையேனும் உடையவர்களாய் இருந்தால் அவர்கள் அரசியல் தஞ்சம் கோரும் உரிமைக்கு தகமை உடையவர்களாக கருதப்படுவர். அ-து தனிநபர் ஒருவருக்கு அபாயம் ஏற்படும் என பயப்படுதல், அரசாங்கப் படைகளினால் பாரபட்சமாக நடாத்தப்படுதல், இடைக்கிடை கொடுக்கப்படுதல் என்பன (உ-ம் அதிகா-ரத்தினால் அடிக்கடி சோதிக்கப்படுதல்) என்பன தஞ்சம் கோருவ-தற்கு போதுமான காரணங்கள் எனக்கருதப்பட முடியாது. பொதுவாக, அரசியல் தஞ்சம் கோரும் ஒருவர் தனது சொந்த நாட்டிற்கு திரும்பிச் செல்லமுடியாத சூழ்நிலையை உடையவர் என்பதை உறுதிப்படுத்துமாறு அவருக்கு இழைத்த தொந்தரவுகள் ஆ அபாயமானவையாக இருக்கவேண்டும்.

.சொந்த அரசாங்கத்திற்கான அரசியல் எதிர்ப்பானது அந்த அரசாங்கத்தினால் அறியப்படாதாக இருப்பதுடன், இதன்காரணமாகவே தொந்தரவுகள் ஏற்படாதாக இருக்கவேண்டும். (உ-ம் [illegible]

படிப்பகம்

padippakam



இயக்கத்தில் அங்கம் வகித்தமை, ஆர்ப்பாட்ட ஊர்வலம் துண்டுப் பிரசுர விநியோகம் என்பவற்றில் பங்கு பற்றியமை) மனச்சாட்சிக்குரிய காரணங்களைக் காட்டுவதன் மூலம் இராணுவ சேவையில் சேருவது மறுக்கப்பட்டிருந்தால் மட்டுமே இராணுவ சேவை செய்வதில் மறுத்தமை அரசியல் தஞ்சம் கோருவதற்கு உண்மையான காரணமாக கொள்ளப்படும். எனவே அரசியல் தஞ்சம் கோரும் ஒருவர் தம் நாட்டின் சேவ இராணுவ சேவைக்கும் எதிரானவராக இருத்தல் வேண்டும். அவர் அரசாங்கத்திற்கு எதிரானவராக இருப்பதால் இராணுவ சேவையில் மறுத்து அரசியல் தஞ்சம் கோருவதை, ஏற்ற காரணமாக கொள்ள முடியாது. தஞ்சம் கோரும் ஒருவரின் வாழ்க்கைச் சிரமமானது அவரது சொந்த நாட்டில் தொடரமுடியாத வகையில் அரசியல் காரணங்களினால் பாரதூரமாக பாதிக்கப்பட்டிருந்தால் மட்டுமே, அது அரசியல் தஞ்சம் கோருவதற்கான பொருளாதார காரணமாக அறியப்படும். சொந்த நாட்டிலுள்ள வேலையில்லாப்பிரச்சினை ஏற்ற காரணம் அல்ல. அத்துடன் விண்ணப்பதாரி ஒருவர் உள்நாட்டு யுத்தம் ஒன்றில் சம்பந்தப்பட்ட மாநிலமொன்றில் வேலையின்மையால் துன்பப்பட்டு தஞ்சம் கோரி வந்திருந்தால் அக்காரணமும் அரசியல் தஞ்சம் கோருவதற்கு போதுமான காரணமாக கருதப்படமாட்டாது.

சொந்த நாட்டை விட்டு புறப்பட்டு வந்த பின்பு அந்நாட்டில் ஏற்பட்ட சில நிகழ்ச்சிகளினால் உண்டான விளைவுகளும் தஞ்சம் வழங்குவதற்கு ஏற்ற காரணங்களாக சில வேளைகளில் கொள்ளப்படும். அரசியல் வழக்கு தாக்குதல்களை ஏற்படுத்தக்கூடிய வகையில் தமது நாட்டிற்கு எதிராக வெளிநாட்டு தொடர்புடன் அரசியல் விடையங்களில் ஈடுபடுதல், வெளிநாட்டிலுள்ள அரசியல் எதிர்ப்பு பிரிவுகளில் உறுப்பினராக சேர்தல், அரசியல் எழுச்சி, புரட்சி என்பவற்றினால் விழுந்த குடியரசிலிருந்து பறந்து வருதல் என்பவையும் இதன் கீழ் உள்ளடக்கப்படலாம். வேறு ஒரு நாட்டில் அகதிக்கு பாதுகாப்பு அளிக்கப்பட்டு, பின்னர் மேற்கு ஜேர்மனிக்கு வந்து தஞ்சம் கோரி விண்ணப்பிக்கும் வெளிநாட்டவர்கள், மேற்கு ஜேர்மனியில் தஞ்சம் கோருவதற்கு தகுதி உடையவர்களாக கருதப்படமாட்டார்கள்.

படிப்பகம்

padippakam


## அரசியல் தஞ்சம் கோருவதற்கான விண்ணப்பத்தை நான் எங்கு செய்தல் வேண்டும்?

மேற்கு ஜேர்மனியில் அரசியல் தஞ்சம் கோரி விண்ணப்பிக்க விரும்பும் வெளிநாட்டவர்கள், தாம் தங்கியிருக்கும் மாவட்டங்களிலுள்ள வெளிநாட்டவர்களுக்கான காரியாலயத்திற்கு (AUSLÄNDERBEHÖRDE) விண்ணப்பித்தல் வேண்டும். படிவங்களையும், அவ்வாறாக நேர விபரங்களையும் நகரமண்டபத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

எல்லைப்புறத்திலிருந்து அரசியல் தஞ்சம் கோரி விண்ணப்பிப்பவர்கள், அண்மையிலுள்ள வெளிநாட்டவர்களுக்கான காரியாலயத்திற்கு செல்லுமாறு எல்லைப்புற உத்தியோகஸ்தர்களினால் பணிக்கப்படுவார்கள். அவர்களின் பணிப்புக்கள் எதுவித தாமதமுமின்றி செயற்படுத்தப்பட வேண்டும். எல்லைப்புற உத்தியோகத்தர்கள் எமது உட்பிரவேசிப்பை மறுத்தால் அவர்களுக்கு எதிராக நிருவாக நீதி மன்றத்தில் (Verwaltungsgericht) வாதாட முடியும். அத்துடன் மேற்கு ஜேர்மனுக்கான எந்தவொரு தூதுவராலயத்திலோ, அயல்நாட்டு பிரதிநிதியின் காரியாலயத்திலோ மேற்கு ஜேர்மனிக்குள் பிரவேசிப்பதற்கான விசாவிற்காக விண்ணப்பிக்கலாம். இந்த உட்பிரவேசிப்புக்கான விசா வழங்குவது மறுக்கப்படுமாயின் அதற்கு எதிராகவும் கொலோனில் உள்ள நிருவாக நீதி மன்றத்தில் அல்லது சமஷ்டி நிருவாக நீதி மன்றத்தில் (Bundesverwaltungsgericht) வாதாட முடியும். வெளிநாட்டவர் ஒருவர் தமக்கு அரசியல் ரீதியான அபாயம் ஏற்படுமெனக் கருதி, விண்ணப்பித்திருந்த போதும் அவர் மேற்கு ஜேர்மனிக்குள் புகுவதற்கான அனுமதி அல்லது விசா மறுக்கப்பட்டால் அவர் சர்வதேச மன்னிப்புச் சபையுடன் அல்லது கீழ்க் குறிப்பிடப்படும் அகதிகளுக்கான நலன்புரி சங்கங்களில் ஒன்றுடன் தொடர்பு கொள்ளல் வேண்டும்.

எல்லையில் அரசியல் தஞ்சம் கோரி விண்ணப்பிக்காத ஒருவர், தான் உட்பிரவேசித்தவுடன் கூடிய கெதியில் அதனைச் செய்தல் வேண்டும். ஏனெனில் மேற்கு ஜேர்மனியில் வசிப்பதற்கான அனுமதியானது விண்ணப்பம் செய்யப்படும் நேரத்திலிருந்தே கணிக்கப்படுகிறது (இந்த மையங்கள் அந்தந்த மாவட்டங்களின்

படிப்பகம்

padippakam



வெளிநாட்டவர்களின் காரியாலயங்களினால் கட்டுப்படுத்தப்படுகின்றன.) வேறு எந்த வகையிலாவது இருப்பிட அனுமதியைப் பெறாமலோ அல்லது கடவுச்சீட்டில் இதற்கான முத்திரை பொறிக்கப்படாமலோ இருந்தால் அந்த வெளிநாட்டவர் மேற்கு ஜேர்மனியில் சட்டவிரோதமாக வசிப்பவராக கருதப்படுவார். இப்படிப்பட்ட ஒருவர் நாட்டை விட்டு வெளியேற்றப்படும் மட்டும் அவர் இருக்குமிடத்திலிருந்து பொலிசாரினால் விலக்கப்படவும், வெளியேற்றப்படவும், தடுத்து வைக்கப்படவும் நேரிடும்.

## எப்படி நான் அரசியல் தஞ்சம் கோரி விண்ணப்பிப்பது?

சட்டத்தரணி ஒருவரின் உதவி எதுவும் இன்றியே அரசியல் தஞ்சம் கோரி விண்ணப்பிக்க முடியும். எனினும், விண்ணப்பிப்பதற்கு முன்னதாக சர்வதேச மன்னிப்புச் சபையிடம் இருந்து, அல்லது அதற்கு சமமான சபைகளிடமிருந்து ஆலோசனைகளைப் பெறுதல் மிகவும் விதந்துரைக்கப்படுகிறது.

அரசியல் தஞ்சம் கோரும் ஒருவர் தனது விண்ணப்பத்தை வெளிநாட்டவர்களுக்கான காரியாலயத்தில் நேரடியாக செய்தல் வேண்டும். அவர் அதில் அரசியல் ரீதியான அபாயங்களுக்கான தனது பயத்திற்கான விபரங்களை காரணங்களுடன் விபரித்தல் வேண்டும். அவர் கீழ்வரும் விபரங்களையும் கொடுக்குமாறு கேட்கப்படுவார்:- வசிக்கும் இடம், பிரயாணப்பாதை, பிரயாணத்தின்போது தங்கியிருந்த இடங்கள், மேற்கு ஜேர்மனியிலோ, அல்லது வேறு எந்த நாட்டிலோ இதற்கு முன்னர் அரசியல் தஞ்சம் கோரி விண்ணப்பித்து இருந்தால் அது பற்றிய விபரம். அத்துடன் இது சம்பந்தமான பத்திரங்களும் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். இந்த வாக்குமூலமானது அறிக்கை ஒன்றில் பதிவு செய்யப்பட்டு பின்னர் அது சமஷ்டிக் காரியாலயத்திற்கு அனுப்பப்படும். மேற்கொண்ட தஞ்ச நடைமுறைகளுக்கு இந்த அறிக்கையானது வலுவான செல்வாக்கைக் கொண்டிருக்கும். இவ்வறிக்கையின் பிரதி ஒன்று தனக்கு கிடைத்தது என்பதை விண்ணப்பதாரர் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். வெளிநாட்டவர்களுக்கான காரியாலயத்தில் தரப்படும் விளக்கமானது மிகவும் அவதானமாக தயாரிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

படிப்பகம்

padippakam



அரசியல் தஞ்சம் கோருவதற்கான இந்த விண்ணப்பத்தை முன்னேற்பாடாக, விபரமானதாக தயாரித்து வைத்தல் புத்திசாலித்தனமானது. அந்த அறிக்கையுடன் உமது விண்ணப்பம் இணைக்கப்படும். விண்ணப்பத்திலுள்ள வாக்குமூலங்கள் விசாரணையின் போது தெளிவாக விபரிக்கப்படல் வேண்டும். தம்மை நேர்முகப்பரீட்சை செய்யும் உத்தியோகத்தர் தமது வாக்குமூலத்தை சுருக்கமான முறையில் இல்லாமல் முழுமையாக எடுத்துக்கொள்ளுமாறு விண்ணப்பதாரர் வற்புறுத்த வேண்டும். அத்துடன் அது அவசியமானது. விசாரணையின் போது தமக்கு மொழிபெயர்ப்பாளர் ஒருவரை ஒழுங்கு செய்யுமாறு வெளிநாட்டவர்களுக்கான காரியாலயத்தை கேட்பதற்கு விண்ணப்பதாரி உரித்து உடையவர். அத்துடன் அவர் விசாரணையின் போது சட்டத்தரணி ஒருவரை, மொழிபெயர்ப்பாளர் ஒருவரை அல்லது தனது நம்பிக்கைக்கு பாத்திரமான ஒருவரை தன்னுடன் அழைத்துவர அனுமதிக்கப்படுவார். அதிகாரிகளால் ஒழுங்கு செய்யப்பட்ட மொழிபெயர்ப்பாளர் விண்ணப்பதாரிக்கு எதிராக தவறான அபிப்பிராயத்தை ஏற்படுத்திவிட்டாரென நம்புவதற்கு வலுவான காரணங்கள் இருந்தால் பின்னராக அவரை ஏற்க மறுத்துவிடல் வேண்டும். அது அவசியமானதுமாகும்.

அரசியல் தஞ்சம் கோருவதற்கான விண்ணப்பம் செய்யப்பட்டதும் விண்ணப்பதாரியின் கடவுச்சீட்டு அதிகாரிகளினால் பாதுகாத்து வைக்கப்படும். இதற்குப் பதிலாக தஞ்ச நடைமுறைகளின் கால எல்லை வரை அவரது வசிப்பிட உரிமையை வழங்கக்கூடிய பிரதிபடத்தை கொண்டதாகவுள்ள அத்தாட்சிப் பத்திரம் ஒன்றை அவர் பெற்றுக்கொள்வார். இந்த நடைமுறைக் காலத்தில் வெளிநாட்டுப்பிரயாணங்கள் செய்வது சாத்தியமானதல்ல. இந்த அத்தாட்சிப் பத்திரமானது ஆகக்கூடியது 6 மாதங்களுக்கே செல்லுபடியாகும். ஆனால் இந்த கால எல்லை முடியும் போது தஞ்ச நடவடிக்கை முடிவடையாமல் இருந்தால் அது புதுப்பிக்கப்படும். மேலதிகமாக, அரசியல் தஞ்சம் கோரும் விண்ணப்பதாரியானவர், அவரது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்கு பொலிசாரினால் ஏற்ற விசாரணை ஒன்றிற்கு உள்ளாக்கப்படுவார். அ-து. பிரதிப்படங்களும் கைவிரல் அடையாளங்களும், அவரது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக எடுக்கப்படுகின்றன. வைத்திய பரிசோதனை ஒன்றும் செய்யப்படும்.

படிப்பகம்

padippakam



குழந்தைகள் பெற்றோர்களின் அரசியல் தஞ்சம் கோரும் விண்ணப்பத்தில் சேர்த்துக்கொள்ளப்படலாம். அவர்கள் 16 வயதுக்கு மேற்பட்டவர்களாயின் தனித்தனியான விண்ணப்பங்கள் தனித்தனியாக விண்ணப்பிக்க வேண்டும். அரசியல் தஞ்சம் கோரும் விண்ணப்பங்கள் கையாள்வதற்கு, முழுப்பொறுப்புள்ள அதிகாரசபை :-

வெளிநாட்டு அகதிகள் அடையாளம் காண்பதற்கான சமஷ்டிக் காரியாலயம்.
(Bundesamt für die Anekennung ausländischer Flüchtlinge)
Rothenburgerstr. 29,
8502 Zirndorf,
தொலை பேசி இல: 0911/6553-1

இத்துடன் தனித்தனியான சமஷ்டி பகுதிகளில் கிளைகளும் உண்டு. எப்படியாயினும், வெளிநாட்டவர் ஒருவர் அரசியல் தஞ்சம் கோரி அங்கு நேரடியாக விண்ணப்பித்தல் முடியாது. வெளிநாட்டவர்களுக்கான காரியாலயத்திலிருந்து அனுப்பப்படும் விண்ணப்பங்களை மட்டுமே சமஷ்டிக் காரியாலயம் ஆராய்கிறது.

## என்ன குறிப்புக்கள் விண்ணப்பம் கட்டாயமாக கொண்டிருத்தல் வேண்டும்.

மேற்குஜேர்மனியில் தஞ்சம் கேட்கும் வெளிநாட்டு அகதி ஒருவர் தான் அரசியல் ரீதியான அபாயங்களினால் பயப்படுவதை விபரித்துக்கூறுதல் வேண்டும். தமது நாட்டு பத்திரிகைகளில் இது சம்பந்தமாக வந்த கட்டுரைகள் போன்றவற்றை சமர்ப்பித்தல் மிகச் சிறந்த அத்தாட்சியாகும். ஆனால் ஒரு சில அரசியல் அகதிகளினால் மட்டுமே இப்படியான சான்றுகளை சமர்ப்பிக்க ~~வேண்டும்~~. முடியும். எனவே தஞ்சம் கோருவதற்கான காரணமானது வேறு திடமான வழிகளில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். விபரமான வாக்கு மூலம் கொடுத்தல் அவசியமாகும். அற்பவிடயமாக தோன்றுபவை கூட முக்கியமானவை ஆகலாம்.

படிப்பகம்

padippakam



எல்லா விடயங்களிலும் விண்ணப்பமானது கீழ்வரும் குறிப்புகளை கொண்டதாக இருத்தல் வேண்டும்:- பிறப்பிலிருந்து தனிப்பட்ட வரலாறு, பாடசாலை வாழ்க்கை, தொழில் பயிற்சி, குடும்ப நிலைமை, கைது செய்யப்பட்டிருந்தால் அது பற்றிய முழு விபரம், சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டமை, விசாரணைகள், பறந்து வந்த சூழ்நிலைகள், கடவுச்சீட்டு பெறப்பட்ட முறை, சட்டமுறையாகவோ, அல்லது சட்டத்திற்கு விரோதமாகவோ நாட்டில் இருந்து புறப்பட்டு வந்தது என்பது பற்றிய விபரம், குடும்ப உறுப்பினர்களுக்கு அல்லது அரசியல் நண்பர்களுக்கு உள்ள அபாயம், பொதுவான அரசியல் நிலைமை தன்னை எப்படி பாதிக்கிறது என்பதை சுட்டிக்காட்டுதல் அவசியம் ஆகும். தன்னை தனிப்பட்ட முறையில் பாதிக்காத பொதுவான நிலைமைகளை விபரிப்பது போதுமானதல்ல.

புகலிடம் தேடி முதலில் ஒரு நாட்டிற்கு சென்று தங்கியிருந்து விட்டு பின்னர் மேற்கு ஜேர்மனிக்கு வந்து, அரசியல் தஞ்சம் கோருபவர்கள், தாம் ஏன் முந்திய நாட்டில் தமது அபாயத்திற்கு பாதுகாப்பு பெறமுடியாமல் போய்விட்டது என்பதை விபரித்தல் வேண்டும்.

நேரடியான வாக்குமூலத்திற்கும் எழுத்துமூல வாக்குமூலத்திற்குமிடையே மாறுபாடுகள் ஏற்படுவதை தவிர்ப்பதில் மிகவும் அவதானம் எடுத்துக் கொள்ளல் வேண்டும். இறுதி நேரத்தில் கொடுக்கப்படும் முக்கிய நடைமுறைகள் பிரயோசனமற்றவையாக அமையும். பிரத்தியேகமான விடயங்களில் மட்டுமே கூற்றுக்களை விலக்குவதற்கு உரிய காரணம் ஏற்றுக் கொள்ளப்படும். பிரயாணத்தை செய்ய முடிவு எடுத்த பின்னர் ஏற்பட்ட காரணங்கள் மேற்கு ஜேர்மனியில் ஏற்பட்ட அரசியல் காரணிகளுடன் பொருந்துவதாக இருந்தால், அவை சுருக்கமாக நிரூபிக்கப்படல் வேண்டும். (உ-ம். அரசியல் நடவடிக்கைகள், ஊர்வலங்களில் பங்குபற்றியமை போன்றன)

## எப்போது வெளிநாட்டவர்களுக்கான காரியாலயம் தஞ்சம் வழங்குவதை மறுக்கும்?

தஞ்சம் வழங்குவது பற்றிய உண்மையான முடிவை செண்டோவிலுள்ள சமஷ்டிக் காரியாலயம் செய்கின்ற போதிலும் வெளிநாட்டவர்களுக்கான காரியாலயமும், எல்லைப்புற உத்தியோகத்தர்களும்

விண்ணப்பமானது முற்றிலும் நோக்கமற்று செய்யப்படுவதாக கருதினால் அதன் ஏற்பதை மறுப்பதற்கு சில நிபந்தனைகளின் கீழ் உரித்துடையவர்கள் ஆவார்கள்.

அரசியல் தஞ்சம் கோரும் ஒருவர், வேறு ஒரு நாட்டில் குறிப்பிடக்கூடிய நாட்கள் திருப்பி அனுப்பப்படாமல் பாதுகாப்பாக இருந்துவிட்டு, பின்னர் அந்நாட்டை விட்டு புறப்பட்டு வந்து இருந்தால் அவரது விண்ணப்பம் முற்றாக நோக்கமற்றதாக கருதப்படும். அந்நாட்டின் வழங்கப்பட்ட அடையாளப் பத்திரங்கள் எவற்றையாவது (வதிவிடத்திற்கான அனுமதி/கடவுச்சீட்டு) அவர் வைத்திருந்தால் மேற்குறிப்பிட்டது சம்பந்தமாக கருதப்படுவார். முந்திய விண்ணப்பம் மறுக்கப்பட்ட பின் புதிதாக விண்ணப்பிக்கும் போது அதில் புதிய காரணமாக கொடுக்கப்படாமலிருந்தால் அவ் விண்ணப்பம் வெறுவாக நோக்கமற்றதாக கருதப்படும். இப்படி விண்ணப்பமானது மறுக்கப்படும்போது தஞ்சம் கோரும் ஒருவர் மோசமான விளைவுகட்கு உள்ளாக நேரிடும். அவர் நாட்டைவிட்டு வெளியேறுமாறும் தமது சொந்த நாட்டிற்கு வெளியேற்றப்படவும் உள்ளாக்கப்படுவோர். இப்படியான விடயங்களில், உடனடியாக தற்காலிக சட்டப்பாதுகாப்பிற்காக நிர்வாக நீதிமன்றத்தில் (Verwaltungsgericht) விண்ணப்பித்தல் வேண்டும். இதற்காக சட்டத்தரணியின் ஆலோசனையைப் பெறல் வேண்டும். இல்லாவிட்டால், நாட்டை விட்டு அகற்றப்படும் கட்டளையானது நிறைவேற்றப்படும். அதன்பின்னர், அரசியல் தஞ்சம் கோரும் ஒருவர் தமது சொந்த நாட்டிலிருந்து தான் விண்ணப்பிக்கலாம். விண்ணப்பம் ஒன்று நிராகரிக்கப்பட்டால் அது திரும்பவும் வெற்றி பெறுவதற்கான சாத்தியக்கூறுகள் மிகவும் குறைவாக உள்ளன. எனவே, இப்படியானவர்கள் திரும்பவும் விண்ணப்பித்த போதும் மிகவும் கெதியாக நாட்டை விட்டு அகற்றப்படுவார்கள்.

<u>அரசியல் தஞ்சம் கோரி விண்ணப்பித்து அதன் இறுதி முடிவு எடுக்கப்படும்வரையில் விண்ணப்பதாரரின் சட்டரீதியான நிலைமை.</u>

எதுவும் இல்லாத நிலையில், அரசியல் தஞ்சம் கோருபவர்கள் ஜேர்மன் அதிகார சபையில் தாம் பதிவு செய்த நாளிலிருந்து சமூகபாதுகாப்பு நன்மைகளை பெறுவதற்கு உரித்துடையவர்கள் ஆவார்கள். இந்த சமூகபாதுகாப்பு நன்மைகளுக்காக, சமூகபாதுகாப்பு காரியாலயத்துக்கு கூடிய கெதியில்

விண்ணப்பிக்க வேண்டும். இந்த உதவிகள் பணமாக மட்டுமில்லாமல் வேறுவகைகளிலும் வழங்கப்படும். அ-து அரசியல் தஞ்சம் கோரும் ஒருவர் அகதிகள் முகாமிற்கு அனுப்பப்படுவார். அங்கு அவர் பொதுவாக எல்லோருக்கும் வழங்கப்படும் உணவை பெறுவார். இதற்கு மேலாக அவர் கைச் செலவிற்காக மாதத்திற்கு 40 தொடக்கம் 60 டச்சு மார்க்குகளை பெறுவார். (அளவானது என்பது அந்தந்த சமஷ்டிப் பகுதிகளைப் பொறுத்தது.)

சாப்பாடு அற்ற வாசஸ்தலங்களுக்கு அனுப்பப்படுபவர்கள் கைச்செலவுகட்கு மேலாக மாதாந்தம் அண்ணளவாக 190 டச்சு மார்க்குகள் உடுப்பு, உணவு, பணம் ஆகிய வகைகளில் பெற்றுக் கொள்வர். (அளவானது என்பது அந்தந்த சமஷ்டிப் பகுதிகளைப் பொறுத்தது) குழந்தைகளும் மற்ற குடும்ப உறுப்பினர்களும் இதைவிடக் குறைவாகப் பெறுவார்கள். முகாம்களில் அறைகளில்லாத போது, பிரத்தியேகமான சந்தர்ப்பங்களில் மட்டுமே தனியான வாசஸ்தலங்கள் எடுக்கல் முடியும். இச்செலவுகள் சமூகபாதுகாப்பு காரியாலயத்தினால் ஏற்றுக்கொள்ளப்படும். வழக்கப்படி, முன்னறி வாடகை வாசஸ்தலங்களில் வசித்திருந்தால், அவர்கள் அதிக ஆக்க வேண்டிய அவசியமில்லை. வைத்திய சிகிச்சைக்கான அத்தாட்சிப் பத்திரம், உடைகளுக்கான பணம் போன்றவை அவசியமானபோது சமூகபாதுகாப்பு காரியாலயத்தினால் வழங்கப்படும்.

கொள்கை அளவில், விண்ணப்பம் சமர்ப்பித்த நாளிலிருந்து இரு வருடங்களுக்குள் அரசியல் தஞ்சம் கோருவோருக்கு வேலை செய்வதற்கான அனுமதிப்பத்திரம் வழங்கப்படமாட்டாது. மேற்கு ஜேர்மனியில் அல்லது மேற்கு பேர்லினில் சட்டரீதியாக இரண்டு வருடங்களுக்கு மேல் வசித்த அரசியல் தஞ்சம் கோரும் ஒருவர் தனிப்பட்ட முறையில் ஆராயப்பட்ட பின்னர் நாட்டிலுள்ள தொழில் வாய்ப்பு நிலைமையை பொறுத்து வேலை செய்வதற்கான அனுமதியை பெற்றுக்கொள்ள முடியும். ஜேர்மனியர் ஒருவருக்கு அல்லது அவருக்கு சமமான வெளிநாட்டு வேலையாள் ஒருவருக்கு குறித்த வேலையை வழங்குவதற்கு 3 மாதங்கள் முயற்சி செய்து அது மேலதிகமாக இருந்தால் மட்டுமே வேலை செய்வதற்கான அனுமதிப்பத்திரம் வழங்கப்படும்.

இவை, சமூக பாதுகாப்பு காரியாலயமானது அரசியல் தஞ்சம் கோருபவர்களை "சமூக" வேலைகளில் அண்மையில் பயன்படுத்தி வருகிறது.

padippakam



இதற்கான சட்ட உரிமையானது சர்ச்சைக்குரியதாயுள்ளது. இப்படி கொடுக்கப்படும் வேலையை மறுப்பவர்கள் தமது சமூக பாதுகாப்பு நன்மைகளை இழக்கும் அபாயத்தை ஏற்க நேரிடும். அதன் பின், அவர், நன்மைகளை குறைத்தல் அல்லது நிறுத்துதலுக்கு எதிராக சட்டத்தரணி ஒருவரை அல்லது நலன் புரிச்சங்கம் ஒன்றினைச் சந்தித்து சட்ட நடவடிக்கை எடுத்தல் வேண்டும்

ஒருவர் அரசியல் தஞ்சம் பெறுவதற்கு தகுதியானவரென சமஷ்டிக் காரியாலயத்தினால் முடிவு எடுக்கப்பட முன்னர் ஜேர்மன் மொழி கற்பதற்கு செலவு வழங்கப்படமாட்டாது. ஆயினும், தருமசிந்தனையுள்ள ஸ்தாபனங்கள் சில இலவசமாக ஜேர்மன் மொழி வகுப்புகளை நடாத்துகின்றன.

சமஷ்டிக் காரியாலயத்தினால் அகதியாக அங்கீகாரம் செய்யப்பட முன்னர் உயர் கல்வி, தொழிற்பயிற்சி ஆகியவை அனுமதிக்கப்படுவதில்லை. அரசியல் தஞ்சத்திற்கு தகுதி பெற்ற பின்னரே குடும்பப் படிப்பணமும் கொடுக்கப்படும். இருந்தாலும் அவர்கள் தகுதி பெறுவார்களானால் விண்ணப்பம் செய்த முந்திய நாளிலிருந்து படிப்பணங்கள் வழங்கப்படும். எனவே கூடுமான சீக்கிரத்தில் விண்ணப்பம் செய்யப்படல் அவசியம்.

மேற்கு பேர்லினும் மேற்கு ஜேர்மனியிலும் இருக்கும் 10 சமஷ்டிப் பிரிவுகளும் எத்தனை அரசியல் தஞ்சம் கோருபவர்களை எடுக்க வேண்டும் என்பதில் குறிப்பிட்ட அளவுகோல்களை கொண்டுள்ளன. எனவே, அரசியல் தஞ்சம் கோரும் ஒருவர் வந்தடைந்தவுடன் குறிப்பிட்ட ஒரு சமஷ்டிப் பிரிவில் விண்ணப்பதாரியாக பதிவுசெய்து ஒரு சில கிழமைகளில் வேறு சமஷ்டிப் பிரிவிற்கு மாற்றப்படலாம். அதன் பின்னர் அவர் அந்தப் பகுதிக்கு தாமதமின்றி செல்லுதல் வேண்டும். இதற்கான பிரயாணச் செலவுகள் சமஷ்டி அரசாங்கத்தினால் வழங்கப்படும். அரசியல் தஞ்சத்திற்கு தகுதியானவர் என்று அறிவிக்கப்படும் வரை அவர் அந்த குறிப்பிட்ட மாவட்டத்தின் அரசாங்க எல்லைக்குள் தங்கியிருத்தல் வேண்டும். தாம் வசிக்கும் இடத்திற்கு அரசியல் தஞ்சம் கோரும் ஒருவர் வந்தடைந்தவுடன் அவ்விடத்திலுள்ள வெளிநாட்டவர்களுக்கான காரியாலயத்தில் பதிவு செய்து கொள்ளல் வேண்டும். அந்த மாவட்டத்தை விட்டு

படிப்பகம்

padippakam



அவசரமான காரணங்கள் இருந்தால் மட்டுமே பிரயாணம் செய்ய முடியும். பொதுவாக, அரசியல் தஞ்சம் கோரும் ஒருவர் தனக்கு விரும்பிய மாவட்டத்தையோ அல்லது வாசஸ்தலத்தையோ தெரிவு செய்தல் முடியாது.

மேலேயுள்ள பகுதியில் விபரிக்கப்பட்டவற்றிற்கு அமைந்து நடக்காதவர்கள் ~~தவறு ஒன்றை இழைத்தவர்கள்~~ தவறு ஒன்றை செய்த குற்றவாளி ஆவதுடன் தண்டனைக்கு உள்ளாக அல்லது சிறைக்கு அனுப்பப்படவும் கூடும்.

## அரசியல் தஞ்சம் கோருவதற்கான விண்ணப்பத்தின் மேல் எப்போது, எப்படி முடிவு எடுக்கப்படுகிறது?

வெளிநாட்டவர் ஒருவர் வெளிநாட்டவர்களுக்கான காரியாலயத்தில் தம்மை பதிவு செய்தவுடன் அல்லது குறிப்பிட்ட சமஷ்டிப் பகுதிக்கு அனுப்பப்பட்டவுடன் சமஷ்டிக்காரியாலய பிரதிநிதி ஒருவரால் நேர்முகப்பரீட்சை செய்யப்படுவார். இதன்போது அரசியல் தஞ்சம் கோரும் ஒருவர் தம்முடன் இவ்விடயங்கள் பற்றி அறிந்த ஒருவரையும் முடியுமானால் தமது மொழி பெயர்ப்பாளரையும் அழைத்துச் செல்லல் வேண்டும். இதற்காக சமஷ்டிக் காரியாலயமானது அவரது சொந்த பாஷையைப் பேசுகின்ற அல்லது அவருக்கு விருப்பிய பாஷை ஒன்றைத் தெரிந்த மொழி பெயர்ப்பாளர் ஒருவரை ஒழுங்கு செய்யும்.

இந்த விளக்கத்தின் போதும் எல்லா விபரங்களும் கொடுக்கப்படுவதுடன் சான்றுகளும் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். அறிக்கையில் கையொப்பமிட முன்னர் அது தமது வாக்குமூலம் முழுவதையும் முற்றாகவும், சரியாகவும் கொண்டுள்ளதா என்பதைப் பார்க்க வேண்டும். அத்துடன் அதன் பிரதியையும் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

வழக்குக் கோவையின் குறிப்பானது எப்பொழுதும் கொடுக்கப்பட்டிருக்கல் வேண்டும். செய்திகள் விண்ணப்பத்திற்கு பின்னராக கொடுக்கப்படும் போது ஏன் அவை முன்பு தெரிவிக்கப்படவில்லை என்பதற்கு விளக்கம் கொடுக்கப்படல் வேண்டும். சில மாதங்களின் பின்னர் சமஷ்டிக் காரியாலயமானது விண்ணப்பத்திற்கான முடிவை எடுத்து அதனை எழுத்து மூலம் தெரிவிக்கும். இந்த முடிவுகள் கொடுக்கப்பட்டு

படிப்பகம்

padippakam



ஒரு மாதத்தின் பின்னரே நடைமுறைப்படுத்தப்படும். ஏனெனில் இந்த காலத்தில் விண்ணப்பதாரர்கள் அதிகாரிகளுக்கு எதிராக சமஷ்டி அரசாங்கத்தின் பிரதிநிதிகளுடன் நிர்வாக நீதிமன்றத்தில் வாதாட முடியும். இப்படி வாதாடுவதற்கான முறையை மேற்கொள்வதற்கு முன்னர் நலன் புரிச்சங்கம் ஒன்றுடன் தொடர்பு கொள்ளல் வேண்டும். விண்ணப்பத்திற்கான மறுப்பானது வெளிநாட்டவர்களுக்கான காரியாலயத்துக்கு அனுப்பி வைக்கப்படும். அங்கு விண்ணப்பதாரர் நாட்டை விட்டு வெளியேறுமாறு கேட்கப்படுவதுடன் அப்படி அவர் செய்யத் தவறின் வெளியேற்றப்படுவார் என பயமுறுத்தப்படுவார்.

வெற்றியடையும் விண்ணப்பதாரர்கள் நிரந்தர வசிப்பிட அனுமதி, மொழியையும், கல்வியையும் கற்க உதவி, ஜேர்மன் சமஷ்டிக் குடியரசில் சுதந்திரம் என்பவற்றைப் பெறுவார்கள். அவர்களுக்கு அகதிகளுக்கான ஜெனிவா ஒப்பந்தப்படி கடவுச்சீட்டு வழங்கப்படும்.

## எனது அரசியல் தஞ்சம் கோருவதற்கான விண்ணப்பத்தை சமஷ்டிக் காரியாலயம் நிராகரித்தால் நான் என்ன செய்ய வேண்டும்?

சமஷ்டிக் காரியாலயம் விண்ணப்பத்தை நிராகரித்தால் முடியுமான கெதியில் நலன்புரிச் சங்கம் ஒன்றிற்கு அறிவித்தல் வேண்டும். விண்ணப்பமானது தெளிவாக காரணமற்றதென நிராகரிக்கப்பட்டால் நிர்வாக நீதி மன்றத்தின் முன் இடைக்கால ஏற்பாடொன்றிற்காக ஒரு வாரத்திற்கு இடையில் விண்ணப்பித்தல் வேண்டும். அதுவும் செய்யப்படாமலிருந்தால் அரசியல் தஞ்சம் கோரும் ஒருவர் வெளிநாட்டவர்களுக்கான காரியாலயத்தினால் தடுத்து வைப்பதற்கு ஒழுங்கு செய்யப்பட்டு அங்கு அனுப்பப்படும் வரையும் வைத்திருக்கப்படலாம். மற்ற எல்லா விடயங்களிலும் ஒரு மாதத்திற்கு இடையில் இந்த நிராகரிப்புகளுக்கு எதிராக நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். அல்லாவிட்டால் அரசியல் தஞ்சம் கோருபவர் ஒரு மாதத்தின் பின்னர் வெளியேற்றப்படலாம்.

படிப்பகம்

padippakam



இந்த நடவடிக்கையானதும் நிராகரிக்கப்படலாம். ஒரு சில வழக்குகளில் மட்டுமே, மேலதிக சட்ட நடவடிக்கைகள் எடுக்க முடியும். மிகவும் குறைந்த நேர இடைவெளியே இந்த நடைமுறைகள் செய்வதற்கு கொடுக்கப்படுவதனால் நாம் பெற்றுக்கொள்ளும் எல்லாக் கடிதங்கள் பற்றியும் உடனடியாக நமது சட்டத்தரணிக்கும் அது சம்பந்தப்பட்ட நலன்புரிச்சங்கத்திற்கும் அறிவித்தல் வேண்டும்.

## அரசியல் தஞ்சம் கோருபவர்கள் யாரை சந்திக்கலாம்?

அரசியல் தஞ்சம் கோருபவர்கள் தமது விண்ணப்பத்தில் அல்லது தமது நாளாந்த வாழ்க்கையில் பிரச்சினைகள் கொண்டிருந்தால் கீழ்வரும் சங்கங்களிடம் அறிவுரைகளையும், உதவிகளையும் தயக்கமின்றி பெற்றுக் கொள்ளலாம்.

— ஜேர்மன் சமஷ்டிக் குடியரசுக்கான அகதிகளுக்கான ஐ. நா. ஸ்தானிகருக்கான பிரதிநிதி

Hoher Flüchtlingskommissar der Vereinten Nationen (UNHCR),
Amt des Vertreters in der Bundesrepublik Deutschland,
Rheinallee 18,
5300 Bonn 2.

— உள்நாட்டு நலன் புரிச்சங்கங்கள் அல்லது கிறிஸ்தவ கோவில்கள் அல்லது

— பின்வரும் சர்வதேச மன்னிப்புச்சபை கிளைகள்

Sektion der Bundesrepublik Deutschland, e.V.
Postfach 170229,
5300 Bonn 1.

Bezirk Berlin,
Pacelliallee 61,
1000 Berlin 33.

இச்சங்கங்களிடமிருந்தும் மற்றைய நலன்புரிச்சங்கங்களின் விலாசங்களை பெற்றுக் கொள்ளலாம்.

படிப்பகம்

padippakam



## எப்போது சர்வதேச மன்னிப்புச் சபையானது அரசியல் தஞ்சம் கோருபவருக்கு சார்பாக நடவடிக்கை எடுக்கும்?

அரசியல் ரீதியாக அபாயம் அடைந்துள்ள அரசியல் தஞ்சம் கோரும் ஒருவர் ஜேர்மனியில் இருந்து அனுப்பப் போவதாக பயமுறுத்தப்பட்டால் அவருக்கு உதவி செய்வதற்கு சர்வதேச மன்னிப்பு சபை நடவடிக்கை எடுக்கும். ஒருவர் சிறைவாசம், சித்திரவதை, மரண தண்டனை என்பவற்றை அவர் அனுப்பப்பட்டபின் அங்கு நேரிடும் என அறிந்தால் அவரைத் திருப்பி அனுப்புவதை தடுப்பதற்கு சர்வதேச மன்னிப்புச் சபை முயற்சி செய்யும்.

இது சம்பந்தப்பட்டவரைப்பற்றி எல்லா விபரங்களும் அறியப்பட்ட பின்னரே ஒரு தஞ்சம் கோருபவருக்கு சார்பான நடவடிக்கை எடுப்பதற்கு சர்வதேச மன்னிப்புச் சபை முனையும்.

சர்வதேச மன்னிப்புச் சபை என்பது, உலகளாவிய, மனித உரிமைகளுக்கான சங்கமாகும். இது எந்த ஒரு அரசாங்கத்திற்கோ அரசியல் கட்சிக்கோ, பொருளாதார கொள்கைகளுக்கோ, சமயங்களுக்கோ சார்பானதல்ல. இது மனித உரிமைகளுக்கான ஐக்கிய நாடுகளின் பொது உறுதி மொழிப்படி உருவாக்கப்பட்டது. சர்வதேச மன்னிப்புச்சபையானது உலகின் எல்லாப் பகுதிகளிலுமுள்ள அரசியல் கைதிகளுக்காக சேவையாற்றுகிறது. அத்துடன் மனித உரிமைகளையும் நிலை நாட்டுகிறது.

படிப்பகம்

padippakam



## ஜேர்மன் சமஷ்டிக் குடியரசிலுள்ள சர்வதேச மன்னிப்பு சபையின், காரியாலயங்கள்.

ai-Aachen
c/o Bernhard Nett
Postfach 123
5100 Aachen
Tel.: (0241)29248

ai-Berlin
Pacelliallee 61
1000 Berlin 33
Tel.: (030)8311046

ai-Bielefeld
Kavalleriestr. 13
4800 Bielefeld 1
Tel.: (0521)178203

ai-Braunschweig
Bäckerklint 1
3300 Braunschweig
Tel.: (0531)19927

ai-Kassel-Göttingen
Querallee 50/52
3500 Kassel
Tel.: (0651)74595

ai-Mainz-Wiesbaden
Gaugofertstr. 14
6500 Mainz
Tel.: (06131)93760

ai-Nordwürttemberg
Hauptstätter Straße 51
7000 Stuttgart 1

ai-Bremen
Goetheplatz 4
2800 Bremen 1
Tel.: (0421)327937

ai-Dortmund
Griserstr. 2
4600 Dortmund 1

ai-Düsseldorf
Talstraße 94
4000 Düsseldorf 1
Tel.: (0211)345094

ai-Essen
c/o Humanistische Union
Kronprinzenstr. 15
4300 Essen 1

ai-Kiel
Legienstr. 26
2300 Kiel 1

ai-Mannheim
Augusta-Anlage 53
6800 Mannheim 1
Tel.: (0621)407361

ai-Tübingen
Postfach 1124
7400 Tübingen 1
Tel.: (07071)27616

ai-Frankfurt
Vogelsbergstr. 36
6000 Frankfurt 1
Tel.: (0611)496149

ai-Hamburg
Neue Gröningerstr. 4
2000 Hamburg 76
Tel.: (040)327003

ai-Hannover
Fraunhoferstr. 15
3000 Hannover 1
Tel.: (0511)667263

ai-Karlsruhe
Amalienstr.42 a
7500 Karlsruhe 1
Tel.: (0721)22863

ai-Köln
Domstr. 56
5000 Köln 1
Tel.: (0221)121415

ai-München
Leonrodstr. 19
8000 München 19
Tel.: (089)165412

ai-Ulm
Rothstr. 14
7900 Ulm/Donau
Tel.: (0731)63632

---

கீழ் வரும் சர்வதேச மன்னிப்பு சபை, மனித உரிமை நிறுவனங்களுடன் இலங்கை தமிழ் மக்கள் பிரச்சினை குறித்து தொடர்பு கொள்ளலாம்.

---

1. Civil Rights Movement of Sri Lanka (CRM)
16/1 Don Carolis Road
Colombo 5 SRI LANKA

2. Movement for Inter-Racial Justice and Equality (MIRJE)
6 Aloe Avenue
Colombo 3 SRI LANKA

3. Koordinationsgruppe Tamilen der GfbV
c/o Tessa Hofmann, Kaiserdamm 9
1000 Berlin 19
Tel.: 030/ 322 32 11

4. Tamil Rights Group
87 Gower Street
GB London WC 1 E 6 AA

5. amnesty international
Sri Lanka- Koordinationsgruppe e.V.
Museumsstr. 7
7410 Reutlingen
Tel.: 07071/83435

6. Komitee für tamilische Rechte
c/o Siegfried Kreischer
Nordendstr. 53
6000 Frankfurt/M. 1

7. Eelam Tamils Welfare Association
Postfach 370151
1000 Berlin 37

---

V. i. S. d. P. : Koordinationsgruppe Tamilen der GfbV
Postfach 2024
3400 Göttingen

படிப்பகம்